முழுப்பதிப்புரிமையுடையது
All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்
Provincial Department of Education. Northern Province
53 T I,II

# கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (உயர் தரம்) முன்னோடிப் பரீட்சை - 2021
# General Certificate of Education (Advance. Level) Pilot Exam - 2021

## பரத நாட்டியம் I, II
## Bharatham I, II

இரண்டு மணித்தியாலம்
**Two Hours**

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிக.

1) ; ; ; ; ; ; ; ததி /, ங்கிண தொம் ததீங்கி /ணதொம் ததீங்கிணதொம் //-- இத் ததிங்கிணதொம் இன் ஜாதி
   1) கண்டம்
   2) மிஸ்ரம்
   3) திஸ்ரம்
   4) சதுஸ்ரம்
   5) சங்கீர்ணம்

2) விநாயக, சண்முக கௌத்துவங்களை இயற்றியவர்
   1) பிரம்மஸ்ரீ என். வீரமணிஐயர்
   2) சு. பொன்னையா
   3) கீதாஞ்சலி வீ. கே. நல்லையா
   4) வழுவூர் இராமையாபிள்ளை
   5) கங்கை முத்து நட்டுவனார்

3) நடிகர்களின் பேச்சு நன்றாகக் கேட்பதற்கும் முகபாவங்களைத் தெளிவாய்ப் பார்ப்பதற்கும் சிறந்தது என பரதமுனி கூறுவது
   1) சேஷ்டம்
   2) மத்யமம்
   3) அவரம்
   4) திரியசிரம்
   5) விகிருதம்

4) ஒரே நேரத்தில் வெவ்வேறு ஸ்தாயிகளில் 2, 3 ஸ்வரங்கள் வாசிக்கக் கூடிய வசதியைக் கொண்டுள்ள வாத்தியம்
   1) பஹுத்வனி வாத்தியம்
   2) நிஸ்கள வாத்தியம்
   3) சகல வாத்தியம்
   4) சங்கீத அளவுகோல்
   5) வைணிக வாத்தியம்

5) வெண்லத்தால் ஆன கருவி
   1) மத்தளம்
   2) வீணை
   3) மேளம்
   4) சேமக்கலம்
   5) சங்கு

6) ‘‘மஹாம்ப கோல’’ நடனம் யாருடைய காலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது?
   1) ராஜசிங்க மன்னன்
   2) நிஸங்க மன்னன்
   3) சேரமான்நபி
   4) பராக்கிரமபாகு
   5) மா

7) ஹீராபதக்கம் பெற்ற நம் நாட்டுக்கலைஞர்
   1) கீதாஞ்சலி வீ. கே. நல்லையா
   2) ஏரம்பு சுப்பையா
   3) பிரம்மஸ்ரீ. என். வீரமணிஐயர்
   4) சு. பொன்னையா
   5) அருணாசல நட்டுவனார்

8) இறைவனுடைய எல்லையில்லா ஆற்றலை விளக்குவது
   1) பூணூல்
   2) நீலகண்டம்
   3) சிலம்பும் கழலும்
   4) திருமேனி
   5) திருமுகம்

9) சங்கினை உதாரணமாகக் கொள்ளும் ஜதி
   1) டமருகஜதி
   2) மிருதங்கஜதி
   3) கோபுச்சஜதி
   4) விருக்ஷயதி
   5) சமஜதி

10) சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவனத்தின் ஆரம்பகால முதல்வராகச் செயற்பட்டவர்
   1) திரு. கே. ஆர். நடராஜா
   2) சுவாமி விபுலானந்தர்
   3) மஹாராஜபுரம் சந்தானம்
   4) திரு. சிவானந்தம்பிள்ளை
   5) வி. எம். நடேசபிள்ளை

11) ‘‘பாலராம பரத’’ என்னும் நூலின் ஆசிரியர்
   1) சுவாதித்திருநாள் மஹாராஜா
   2) கார்த்திகைத் திருநாள் மஹாராஜா
   3) வடிவேலு
   4) கல்யாணி அம்மா
   5) சின்னம்மு

12) திருக்குற்றாலக் குறவஞ்சியின் கதாபாத்திரங்கள்
   1) சிங்கன், சிங்கி, வசந்தவல்லி, திரிகூடநாதர்
   2) முருகன், வள்ளி, தெய்வானை, சிவன்
   3) சிவன், பார்வதி, கங்கை, பூமாதேவி
   4) விஷ்ணு, லக்சுமி, பூமாதேவி, சரஸ்வதி
   5) குறவன், கட்டியக்காரன், சேனாதிபதி, சிங்கி

13) மனிதஅசைவு, குதிரைஅசைவு இரண்டும் கலந்த கிராமியநடனம்
   1) கரகம்
   2) காவடி
   3) குறத்திநடனம்
   4) பாவைக்கூத்து
   5) குதிரையாட்டம்

14) சோழர் காலத்தில் உயர்நிலையிலிருந்த கலைஞர்கள்
   1) தளியிலார்
   2) தளிச்சேரிப்பெண்டிர்
   3) தலைக்கோலி
   4) பதியிலார்
   5) கணிகையர்

15) இரண்டு கைகளையும் விடாமல் காட்டும் போது பாணாசுரன் ஆயிரம கைகள் உள்ளது போல் காட்டும் அபிநயம்
   1) பாவாபிநயம்
   2) தொந்தாபிநயம்
   3) வெகுவான அபிநயம்
   4) அற்பமான அபிநயம்
   5) இலட்சணிகா அபிநயம்

16) கடவுளின் சௌந்தர்ய அலங்காரங்களைப் புலப்படுத்தும் பக்தி
   1) லாவண்யபக்தி
   2) மாதுரியபக்தி
   3) மூர்க்கபக்தி
   4) சாக்கியபக்தி
   5) 1ம், 2ம் சரி

17) கையைக் கெட்டியாக மூடுதலும் திறத்தலும்
   1) விசர்ணித
   2) துருவகம்
   3) பதிதம்
   4) பதாகம்
   5) பத்மினி

18) அபிநயதர்ப்பணத்தை கலாஷேத்ர வெளியீடாக தமிழில் வெளியிட்டவர்
   1) உத்படர்
   2) வீரராகவையன்
   3) அபிநவகுப்தர்
   4) உ. வே. சுவாமிநாதஐயர்
   5) நந்திகேஸ்வரர்

19) பூர்வீக குடிகள் அல்லது வேடுவர்களுக்குச் செய்யப்படும் ஒப்பனை
   1) மினுக்கு
   2) டெப்பு
   3) பச்சை
   4) கறுப்புத்தாடி
   5) சிவப்புத்தாடி

20) திருகுடு தக தக = திருகுடு தக திருகுடு தக இதில் காணப்படும் மாத்திரைகளின் எண்ணிக்கை
   1) 10
   2) 14
   3) 11
   4) 15
   5) 21

21) பெண்வேடம் தரித்த முதலாவது ஆண் நடனக்கலைஞர்
   1) ஈ.கிருஷ்ணையர்
   2) அருணாசல நட்டுவனார்
   3) ரங்கவடிவேலு
   4) ஏரம்பு சுப்பையா
   5) சு. பொன்னையா

22) தெய்வத் தன்மையும் மனிதத் தன்மையும் கலந்த நாயகிக்கு உதாரணம்
   1) இந்திராணி
   2) மாலதி
   3) சீதை
   4) சூர்ப்பனகை
   5) கண்ணகி

23) சிருங்கார விஷய்களிலும் காம சாஸ்திரங்களிலும் கை தேர்ந்தவன்
   1) விடன்
   2) பீடமர்த்தன்
   3) விதூஷகன்
   4) சேடன்
   5) ஷடன்

24) மோகன இராகத்தில் பாடப்படுவது
   1) வர்ணம்
   2) தேவாரம்
   3) தில்லானா
   4) திருவாசகம்
   5) அலாரிப்பு

25) ஆடைத் தெரிவின் போது முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டியது
   1) உயரம், நிறம், பருமனுக்கு ஏற்ற ஆடை
   2) உருப்படிக்கு ஏற்ற ஆடை
   3) வயதுக்கு ஏற்ற நிறம்
   4) ரஸத்திற்கு ஏற்ற ஆடை
   5) நர்த்தகியின் விருப்பம்

26) இரஸம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணம்
   1) உத்தீபன விபாவம்
   2) ஆலம்பன விபாவம்
   3) விபாவம்
   4) அனுபாவம்
   5) வியபிசாரி பாவம்

27) நிலம்சார் நடனங்கள்
    1) சாக்கையர் கூத்து, குன்றக்குரவை, துணங்கைக்கூத்து
    2) துணங்கைக்கூத்து, முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை
    3) வேட்டுவவரி, ஆய்ச்சியர்குரவை, குன்றக்குரவை
    4) வரிக்கோலம், வேட்டுவவரி, பாண்டரங்கம்
    5) பாவைக்கூத்து, மற்கூத்து, ஆய்ச்சியர்குரவை

28) உற்சவமூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் இடம்
    1) கனகசபை
    2) பேரம்பலம்
    3) சிற்சபை
    4) நிருத்தசபை
    5) ராஜசபை

29) இந்திரனை அபிநயிக்கும் பாதபேதம்
    1) ஸ்தானகம்
    2) ஏகபாதபிரமரி
    3) ப்ரஹ்மஸ்தானம்
    4) ஐந்த்ரம்ச
    5) லோலிதம்

30) வேடன், வேடுவிச்சி, வெள்ளைக்காரன், வெள்ளைக்காரி வந்து பார்ப்பது போல நடைபெறும் கூத்து
    1) காமன்கூத்து
    2) வசந்தன் கூத்து
    3) பறைமேளக்கூத்து
    4) வாசாப்புக்கூத்து
    5) மகிடிக்கூத்து

31) 145 எண்ணிக்கையை எடுத்துக் கொள்ளும் தாளம் -- முறையே ஜாதி, தாளம், கதி
    1) சங்கீர்ணஜாதி துருவதாளம் கண்டகதி
    2) சங்கீர்ணஜாதி மட்டியதாளம் கண்டகதி
    3) சங்கீர்ணஜாதி அடதாளம் கண்டகதி
    4) சங்கீர்ணஜாதி திரிபுடைதாளம் மிஸ்ரகதி
    5) சங்கீர்ணஜாதி ஜம்பைதாளம் மிஸ்ரகதி

32) கூத்தனாரின் முழுப்பெயர்
    1) நான்முகக்கூத்தன்
    2) சாத்தன்
    3) நாட்டியபிரம்மா
    4) கூத்தனார்
    5) செம்பூர் சேயோன் சாத்தன்

33) மதுரையை ஆண்ட முத்து விஜயரங்க சொக்கநாத நாயக்கர் குறவஞ்சி மேடு என்னும் நஞ்சை நிலத்தை வாரம் வரியின்றி முற்றூட்டாக யாருக்கு வழங்கினார்?
    1) அருணாசல நட்டுவனார்
    2) பிரம்மஸ்ரீ என். வீரமணிஐயர்
    3) ஏரம்பு சுப்பையா
    4) திரிகூடராசப்பக்கவிராயர்
    5) நாட்டியபிரம்மா

34) பெண்களுக்குரிய ‘‘மெய்’’ என்னும் உருப்படி பெண்களுக்கு திஸ்ரகதியிலும் ஆண் களுக்கு சதுஸ்ரகதியிலும் ஆடப்படுவது காணப்படும் நடனமரபு
1) யக்ஷகானம்
2) கூடியாட்டம்
3) கதக்
4) கதகளி
5) பாகவதமேளா

35) நேபாளத்தில் நாட்டில் ‘‘கந்தர்வகானா’’ என்று சொல்லப்படும் நடனம்
1) கூடியாட்டம்
2) கதகளி
3) யக்ஷகானம்
4) பாகவதமேளா
5) மோகினியாட்டம்

36) வட இலங்கை சங்கீத சபையின் முதலாவது செயலாளர்
1) டொக்டர் இயன் சண்டிமன்
2) எஸ். பரம்
3) திரு. டபிள்யூ. எம். குமாரசுவாமி
4) S. Fx. அண்ணாசாமிப்பிள்ளை
5) சியாமாசாஸ்திரிகள்

37) கச்சேரியின் நிறைவைக் காட்டி நிற்கும் உருப்படி
1) அலாரிப்பு
2) வர்ணம்
3) ஸ்லோகம்
4) தில்லானா
5) சப்தம்

38) கீதாஞ்சலி நல்லையாவை ‘‘இவர் நாட்டிய நடனப் பிரபஞ்சத்திலே நன்கு பரீட்சை யமானவர்’’ எனப் பாராட்டியவர்
1) தே. பொ. மீனாட்சி சுந்தரம்
2) ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா
3) கவிஞர் வீசாத்தி
4) குரு கோபிநாத்
5) திருவனந்தபுர ஸ்ரீ லக்ஷ்மணன்

39) ஸ்ரீபலி கொடுக்கும் போது வாத்யம் வாசிக்கும் காலம்
1) மத்திமகாலம்
2) விளம்பகாலம்
3) துரிதகாலம்
4) சமகாலம்
5) அதிதுரிதகாலம்

40) கோவில் வழிபாட்டில் நிருத்தம் எவ்வாறு பயன்பட்டது எனக் கூறும் நூல்கள்
1) சிதம்பரஷேத்திர சர்வஸ்யம், நிருத்யரத்னாவலி
2) பத்தி, மத்தவிலாசம்
3) மத்தவிலாசம், சிலப்பதிகாரம்
4) சிலப்பதிகாரம், சிதம்பரஷேத்திர சர்வஸ்யம்
5) ஈசான்குருகே, பத்ததி

41 – 45 வரையான வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

| இராகம் | சக்கரம் | ரிஷபம் | காந்தாரம் | தைவதம் | நிஷாதம் |
|---|---|---|---|---|---|
| மானவதி | இந்து | சுத்தரிஷபம் | சுத்த காந்தாரம் | A | காகலி நிஷாதம் |
| வருணப்பிரியா | வேத | சதுஸ்ருதி ரிஷபம் | சாதாரண காந்தாரம் | ஷட்சுருதி தைவதம் | B |
| வாகதீஸ்வரி | ருது | ஷட்சுருதி ரிஷபம் | C | சதுஸ்ருதி தைவதம் | கைசிகி நிஷாதம் |
| சுசரித்த | ஆதிஸ்ச | D | அந்தர காந்தாரம் | சுத்த தைவதம் | சுத்த நிஷாதம் |
| E | திசி | சதுஸ்ருதி ரிஷபம் | சாதாரண் காந்தாரம் | சுத்த தைவதம் | கைசிகி நிஷாதம் |

41) A இல் இடம் பெற வேண்டிய தைவதம் ---------------------- ஆகும்.
1) சுத்த தைவதம்
2) சதுஸ்ருதி தைவதம்
3) ஷட்சுருதி தைவதம்
4) சுத்த தைவதம், சதுஸ்ருதி தைவதம்
5) சதுஸ்ருதி தைவதம், ஷட்சுருதி தைவதம்

42) B இல் இடம் பெற வேண்டிய நிஷாதம் -------------------- ஆகும்.
1) கைசிகி நிஷாதம்
2) சுத்த நிஷாதம், கைசிகி நிஷாதம்
3) காகலி நிஷாதம்
4) சுத்த நிஷாதம்
5) கைசிகி நிஷாதம், காகலி நிஷாதம்

43) C இல் இடம் பெற வேண்டிய காந்தாரம் ------------------ ஆகும்.
1) அந்தர காந்தாரம்
2) சாதாரண காந்தாரம்
3) அந்தர காந்தாரம், சுத்த காந்தாரம்
4) சுத்த காந்தாரம்
5) சாதாரண காந்தாரம், அந்தரகாந்தாரம்

44) D இல் இடம் பெற வேண்டிய ரிஷபம் ------------------- ஆகும்.
1) சதுஸ்ருதி ரிஷபம், சுத்த ரிஷபம்
2) ஷட்சுருதி ரிஷபம், சதுஸ்ருதி ரிஷபம்
3) சுத்த ரிஷபம்
4) ஷட்சுருதி ரிஷபம்
5) சதுஸ்ருதி ரிஷபம்

45) E இல் இடம் பெற வேண்டிய இராகம் ------------- ஆகும்.
1) கல்யாணி
2) மாயாமாளவகௌளை
3) சங்கராபரணம்
4) ஹரிஹாம்போதி
5) ஷண்முகப்பிரியா

46) இப் படத்தில் காணப்படும் இசைக்கருவி



1) சங்கு
2) தப்பு
3) பறை
4) மத்தளம்
5) சேமக்கலம்

47) இப் படத்தில் காணப்படும் நாட்டியக் கலைஞர்



1) ஏரம்பு சுப்பையா
2) கீதாஞ்சலி வீ. கே. நல்லையா
3) பிரம்மஸ்ரீ என். வீரமணிஐயர்
4) சு.பொன்னையா
5) அருணாசல நட்டுவனார்

48) இப் படத்தில் வெளிப்படுத்தப்படும் சாஸ்திரிய நடனம்



1) ஓடிசி
2) குச்சுப்புடி
3) மணிப்புரி
4) கண்டியநடனம்
5) றுகுணு நடனம்

49) இப் படத்தில் காணப்படும் பரத நாட்டிய அணிகலன்கள்





1) கைவங்கி, பிலாக்கு
2) நத்து, உச்சிவரி
3) சூரியபிறை, சந்திரப்பிறை
4) நெற்றிவரி, தோடு
5) ராக்கொடி, குஞ்சம்

50) இப் படத்தில் காணப்படும் ஆடல்வகை



1) குதிரையாட்டம்
2) ஏந்தல் நடனம்
3) காவடியாட்டம்
4) பொம்மலாட்டம்
5) ஒயிலாட்டம்